# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# வரவு செலவுத்திட்டம் – 2024

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் பாகம் VI இல் **பிரதேச சபைகளை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்** எனும் தலைப்பின் கீழ் உள்ள 168ஆம் பிரிவின் உறுப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவற்றிற்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

| | | |
|---|---|---|
| **மொத்த வருமானம் (ரூபா)** | **-** | **363,721,000.00** |
| **மொத்தச் செலவினம் (ரூபா)** | **-** | **363,718,500.00** |
| **செலவிலும் கூடிய வரவு** | **-** | **2,500.00** |

2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் எனது அறிவுறுத்தலின் பிரகாரம் சபை உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்டு 2023.12.11 ம் திகதிய 185 இலக்க நிர்வாகக்கட்டளை மூலம் நிறைவேற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

**திருமதி. சாரதா .உருத்திரசம்பவன்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## செயலாளர் அவர்களின் வரவு செலவுத்திட்டச் செய்தி – 2024

*"வளமான சபை – வலி தெற்கு"*

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களில் சிறந்த சேவையினை வழங்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கருவில் இருந்து கல்லறை வரை மக்களின் தேவைகளை இயன்ற வரை பூர்த்தி செய்வதிலும் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பொதுமக்களின் பொருளாதார அபிவிருத்தியிலும் வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்துவதில் கடந்த காலங்களை விட அதி உத்வேகத்துடன் செயற்படவுள்ளோம். எனினும் அனைத்து வட்டாரங்களுக்கும் சமமான அபிவிருத்தியினை மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள் மக்கள் முன்மொழிவுடன் உள்வாங்கப்பட்டு இவ் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ் நிதியாண்டில் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய அனைத்த வருமானங்கள் மற்றும் வளங்களினைப் பெற்று நிதி மற்றும் நிர்வாக நடைமுறைகள் என்பவற்றினூடே சிறப்பான முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்த எண்ணியுள்ளோம். பொது மக்களின் பங்கேற்பின்னுடான ஆலோசனைக் குழுக்கள் மற்றும் சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டுமென விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன். சுபையினால் எதிர்பார்க்கப்படும் வருமானத்தை செலவு செய்வதில் மாத்திரமன்றி சபையின் அபிவிருத்திக்காக நிலையான வருமான அதிகரிப்பிலும் சபையினது சொத்துக்களின் பெறுமதி அதிகரிப்பிலும் நாம் செயற்பட்டமையை கடந்தகால வரவு செலவுத்திட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். இவற்றைவிட பாராளுமன்றம் மற்றும் மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டநிதி போன்றவற்றின் மூலம் அவ்வப்போது குறித்தொதுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளோம். இவ் வரவு செலவுத்திட்டம் நிகழ்ச்சித்திட்டங்கள் ரீதியாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

### பொது நிர்வாகம்

01. பிரதேச சபையின் செயற்பாடுகளை துரிதமாகவும் திறமையாகவும் செயற்படுத்தக்கூடிய நிர்வாக அமைப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
02. சபையின் சொத்துக்களை சரியான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல்.

03. ஆளணி நியமனத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதிலும் மேலதிக ஆளணியை கோரிப்பெறுவதிலும் அதிகூடிய கவனம் செலுத்துதல்.
04. மக்களின் ஒத்துழைப்புடன் அங்கீகரிக்கப்பட்ட வரிகளையும் நிலுவைகளையும் சம்பந்தப்பட்டவரிடம் இருந்து அறவீடு செய்வதற்கும் அவ்வாறு அறவிடுவதுடன் வருமானத்தில் பெரும் பகுதியை மக்களின் தேவைகளை நிறைவேற பயன் படுத்துதல்.

## சுகாதார சேவைகள்

01. சபை எல்லைக்குள் வீதிகளில் காணப்படும் திண்மக்கழிவுகளை உரிய நேரத்தில் அப்புறப்படுத்தல். மற்றும் சுகாதாரம் சம்பந்தமான சகல வேலைகளும் ஒழுங்கான முறையில் நடைபெறுவதை உறுதிசெய்தல்.
02. ஆயுர் வேத மருந்தகங்களுக்கு சிறப்பான முறையில் தட்டுப்பாடின்றி மருந்துகளை பெற்றுக்கொள்ள ஆவன செய்தல்.
03. சன சமுக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கலும், எமது பிரிவின் கீழ் உள்ள சனசமுக நிலையங்களில் இயங்கும் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்குதலும்.
04. பொது சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையிலும் முழுக்கவனம் செலுத்துதல்

## பௌதிக திட்டமிடல்

01. சபைக்கு சொந்தமான பொது வீதிகளை புனரமைப்பு செய்தலும், பராமரித்தலும்.
02. சபைக்கு செந்தமான காணிகள் கட்டிடங்கள் என்பவற்றை உரிய முறையில் பேணுதல்.
03. தேவை ஏற்படும் பட்சத்தில் புதிய பொது வீதிகளை அமைத்தல், புதிய கட்டிடங்கள் அமைத்தல், சபைக்குரிய வீதிகளில் நடைபெறும் அத்துமீறல்களை கண்டறிந்து அவற்றிற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்.
04. போதியளவில் வீதி விளக்கு பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## நீர் வழங்கல்

01. மக்களின் கோரிக்கையின் பிரகாரம் நீர் தாங்கிகள் வைத்து குடிநீர் வழங்கும் திட்டத்தை சீராக மேற்கொள்ளல்.
02. அனர்த்தம் ஏற்படுகின்ற போது நீர் வழங்கும் சேவைக்கான ஏற்பாடுகளை விரைவுபடுத்தல்.
03. எதிர் காலத்தில் குடிநீர் வழங்கும் சேவையை விரிவுபடுத்துவதற்கு ஏதுவாக புதிய தண்ணீர் பவுசர் கொள்வனவுக்கான முயற்சி எடுத்தல்.

## பொதுப்பயன்பாட்டுச் சேவை

01. சுன்னாகம் மற்றும் மருதனார்மடம் பொதுச்சந்தைகளை புனரமைப்பு செய்தல்.
02. வீடுகளில் மேலதிகமாக தங்கியுள்ளவர்களின் தரவுகளை சேகரித்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தவும் சுகாதார வசதியை மேம்படுத்தவம் நடவடிக்கை எடுத்தல்.
03. LDSP திட்டத்தின் கீழ் சுன்னாகம் சந்தைப்பகுதில் கடைத்தொகுதி புனரமைப்பு செய்தல்.

04. சபையின் மயானங்களை புனரமைப்பு செய்தலும் பராமரித்தலும்.

## ஏனைய நலன்புரிச் சேவைகள்

01. எமது சபைக்கு உட்பட்ட வறிய மக்களின் சுயதொழில் முயற்சிக்கான பயிற்சிகளையும் வாழ்வாதார வசதிகளையும் வழங்கி அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.
02. உள்ளூர் கைத்தொழிலாளர்களிற்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
03. மக்களின் சுயதேவைகளை நிறைவு செய்து வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவித்தல்.
04. விசேட தேவையுடையவர்களுக்கான நலநோன்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
05. சபையின் நூலகங்களுக்கு புத்தகங்கள் புதிதாக கொள்வனவு செய்தல்.
06. சபைக்கு சொந்தமான விளையாட்டு மைதானத்தினை பராமரித்தல்

பிரதேச அபிவிருத்தியின் பொருட்டு சன சமூக நிலையங்களை வலுவூட்டுவதற்காகவும் மக்களின் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கிலான பல செயற்றிட்டங்களை இவ்வாண்டிலும் செயற்படுத்தவுள்ளோம். மேலும் இவ் வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கு துணைபுரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

திருமதி.சாரதா உருத்திரசம்பவன்
செயலாளர்
வலிதெற்கு பிரதேச சபை
சுன்னாகம்.

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# 2024ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கை

வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் அபிவிருத்தி நோக்கி தயாரிக்கப்படும் 2024ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமானது புதிய உள்ளூராட்சி மறுசீரமைப்புடன் அதிகார எல்லையில் வசிக்கின்ற மக்களின் சுகாதாரம், பொதுப்பயன்பாடு, நலன்புரிச்சேவைகள், பகிரங்க பொதுவழிகள் தொடர்பான கருமங்களினை ஒழுங்குபடுத்தி, மேற்பார்வை செய்வதற்கும் மக்களின் சௌகரியத்தையும் வாழ்வசதிகளைப் பாதுகாத்தலுக்குமாக வினைத்திறன் மிக்க திட்டமிடலுடன் கூடிய வரவு செலவுத்திட்ட அறிக்கையாக இதனைக் கருதுகின்றேன்.

பிரதேச வளங்களையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் இனங்கண்டு அவர்களின் பங்கேற்புடன் பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்கள் முன்னெடுப்பதற்கு உறுதி கொண்டுள்ளேன். அங்கீகரிக்கப்பட்ட வரி வருமானங்களை மக்களின் பங்கேற்புடன் மக்களிடமிருந்தும் ஏனைய வருமானங்களை உரிய தரப்பினரிடமிருந்தும் உரிய காலத்தில் அறவிடுவதற்கும் இதனூடாக சபை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளைக் குறித்த ஆண்டில் துரிதமாக முன்னெடுத்துச் செல்லவும் எதிர்பார்த்துள்ளோம். அந்த வகையில் சபையின் வரி வருமானத்தினை அதிகரிப்பதற்காக ஏழாலை உப அலுவலகத்திற்கு உட்பட்ட ஆதனங்களுக்கு மீள்மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சபைக்குட்பட்ட சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை வருமானமும் வரவு செலவுத்திட்ட ஆண்டில் கணிசமான அதிகரிப்பைக் கொண்டுள்ளது. கழிவகற்றல் சேவைக்கான கட்டண அறவீடும் இவ்வாண்டில் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. அத்துடன் பிளாஸ்ரிக் வெற்றுப்போத்தல்களின் விற்பனையும் இவ்வருடத்தை விட அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டெரு தயாரிப்பின் ஊடான விற்பனை வருமானமும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவற்றினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்த்த செலவினங்களை மேற்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அரசினாலும் வேறு நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்ற நன்கொடைகளினைக் கொண்டும் திட்டமிட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னுரிமையடிப்படையில் நிறைவேற்றப்படும். 2024 ஆம் ஆண்டில் அரச நன்கொடைகள் தவிர்ந்த ஏனைய சபையின் வருமானத்தில் 62.3% மூலதன அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள மூலதனச் செயற்றிட்டங்களுக்குக் கிடைக்கின்ற நிதியினை அதிகரிப்பதற்கான அரச, தனியார் நிறுவனங்களுக்கு உரிய திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமானது மக்களுக்கு சிறந்த சேவை வழங்கலை இலக்காகக் கொண்டதும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையில் உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கொண்டதுமான நிலையினைக் காட்டுகின்றது

மேலும் பொதுமக்களுக்குப் பயனுறுதி வாய்ந்த சேவைகளை விரைவாகப் பெற்றுக்கொடுக்க இவ்வாண்டில் சபையின் ஆதனவரி சேகரித்தல், குறைகேள் முறைமை மற்றும் இதர சேவை வழங்கல் முறைமைகள் கணனிமயப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டிற்காக சபையினால் பெற்றுக்கொள்ளப்படவுள்ள மொத்த வருமானம் ரூபா. 363,721,000 ஆக எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வருமானத்தைக் கொண்டு **06** நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான செலவினங்களைக் கீழ்வருமாறு மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01 | பொது நிர்வாகம் | 86,610,404.00 |
| 02 | சுகாதார சேவைகள் | 54,547,210.00 |
| 03 | பௌதீகதிட்டமிடல் பொதுவழிகள் காணி கட்டிடங்கள் | 188,353,446.00 |
| 04 | தண்ணீர் சேவைகள் | 1,900,000.00 |
| 05 | ஏனைய பொதுப்பயன்பாட்டு சேவைகள் | 9,539,280.00 |
| 06 | நலன்புரிச்சேவைகளும் பிறசேவைகளும் | 22,768,160.00 |
| | **மொத்த செலவினம்(ரூபா)** | **363,718,500.00** |

எனவே இதுவரை காலமும் ஒத்துழைப்பையும் ஆதரவினையும் வழங்கியது போல இவ்வருடமும் ஆலோசனைக்குழுக்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்த கூட்டு செயற்பாட்டின் மூலமும், பொதுமக்கள் சபைக்குச் செலுத்த வேண்டிய வரிகளை உரிய காலங்களில் செலுத்தி வருமானச் சேகரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலமும் வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டபடி விரைவாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. சா. உருத்திரசம்பவன்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.